மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையிலே வேறு திருத்தங்கள் செய்ய வேண்டிய காரணத்தினால், அது நாளைக்கு எடுத்துக் கொள் ளப்படும். திரு. ஜேம்ஸ் அவர்கள் மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசர முக்கியத் துவம் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

5. நடைமுறைப் கேள்வி

கேள்வி நேரத்திற்குப் பிறகு உடனடியாக அவையுரிமைப் பிரச்சினைகளை எடுத்துக்கொள்ளாதது குறித்து.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டப் பேரவையின் விதி எண் 186-ன் கீழ் இப்பொழுது ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்கள், 1—12—1973 அன்றும், இன்றும் நம்முடைய சட்டப் பேரவையின் விதிமுறைக்கு மாறாக நிகழ்ச்சியை நடத்துவதனால் நான் இந்த ஒழுங்குப் பிரச்னையை வலியுறுத்த விரும்புகிறேன்.

விதி 186-ல்—

'A matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon.

Provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business.'

என்று இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள், சபையில் எது இருந்தாலும் உரிமைப் பிரச்னைக்குத்தான் முன்னிடம் தர வேண் டும் என்பதுதான் நம்முடைய விதிமுறை. ஆனால், பேரவைத் தலைவர் அவர்கள், 1-12-1973 அன்று உரிமைப் பிரச்சினை சபையில் இருக்கிற காலத்தில், மற்ற உரிமைப் பிரச்னைகளுக்குரிய தீர்ப்பை வழங்கினீர்கள். அதே போல், இன்றும் நம்முடைய மாண்புமிகு திரு. வகாப் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறார். அதை முன்னாலே எடுத்துக் கொள்ளாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அறிக்கை படிப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, நம்முடைய விதிமுறைக்கு மாறாக

1973 டிசம்பர் 3] *[திரு. பெ. சௌந்தரபாண்டியன்]*

பேரவைத் தலைவர் அவர்கள் நடந்து இருக்கிறீர்கள். பேரவைத் தலைவர் அவர்கள், விதிமுறைகளைப் பின்பற்றுகிறார்களா, அல்லது சமயத்திற்கு ஏற்ப அவை நடவடிக்கைகளை மாற்றுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள். அது இன்றைய அஜண்டாவிலே குறிக்கப்படாத ஒரு நிகழ்ச்சி. அதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவையின் கேள்வி நேரம் முடிவுற்று, அஜண்டாவிலே கொடுக்கப்பட்டுள்ள அடுத்த நிகழ்ச்சியை எடுத்துக்கொள்வதற்கு முன்னாலே, எதை ஏற்றுக்கொள்வது என்பது வரும்போது, பிரிவிலெஜ் மாட்டரை எடுத்துக் கொள்வதா அல்லது ஒத்தி வைப்பு தீர்மானத்தை எடுத்துக்கொள்வதா, என்ற கேள்வி வருகிறது. அது கேள்விக்கும் அஜண்டாவிலே இருக்கிற அடுத்த நிகழ்ச்சிக்கும் இடையிலே எடுத்துக்கொள்வது. இதிலே எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை. முறையாக, பிரிவிலெஜ்ஜைத் தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்கிறேன். இங்கு குறிப்பிடப்பட்டது, அஜண்டாவிலே இல்லாததால், அதை எடுத்துக்கொண்டேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அந்த விதியின் இறுதியைக் கூர்ந்து படித்தால், தெரியும். 'over all other business'. என்று இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் தயவு செய்து கூர்ந்து கேட்டால், என்னுடைய கேள்வியின் உண்மை புரியும் என்று நினைக்கிறேன்.

'shall be entitled to immediate precedence over all other business.'

வேறு எந்த நிகழ்ச்சி இருந்தாலும், உரிமைப் பிரச்னைக்குத்தான் முதலிடம் அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவிலெஜ்ஜை இரண்டு முறைகளில் எழுப்பலாம். ஒன்று, இந்த அவையில் நடந்த நிகழ்ச்சிக்கு, நேற்றோ, முந்திய நாளிலோ நடந்த நிகழ்ச்சிக்கு பிரிவிலெஜ் வரும். சில பிரிவிலெஜ்கள், உரிமைப் பிரச்னைகள் அப்பொழுதே நடப்பதைப்பற்றி வந்தால், மற்ற எல்லா அலுவல்களையும் நிறுத்திவைத்து அவை அப்பொழுதே விவாதிக்கப் படும். இதிலே எந்தவித பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

6. கவன ஈர்ப்பு

(அ) குமரி மாவட்டத்தில் பல தொடக்கப்பள்ளிகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லாமை குறித்து

THIRU J. JAMES : Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the existence of many primary schools in Kanyakumari district without sufficient number of teachers since the Government have not sanctioned posts for many schools in both the Government and Private Managements, consequently students are not properly taught.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு 7 கால் அட்டென்ஷன் நோட்டிஸ்கள் இருக்கின்றன. நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுப்படி, இன்றோடு அவை முடிவதாக இருக்கிறது. இன்றோடு அவை முடிவதாக இருந்தால், இன்றைக்கே எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம். நாளைக்கு அவையை நீட்டிப்பதாக இருந்தால், நாளைக்கு 3 அல்லது 4 நோட்டிஸ்களை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, சபையில் அலுவல் அதிகமாக இருக்கிற காரணத்தால், நாளைய தினமும் சட்டப்பேரவையை வைத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாளை காலையில் வைத்துக்கொள்ளாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளையும் பேரவை இருப்பதால் இன்றைக்கு 4 எடுத்துக்கொண்டு நாளைக்கு 3 எடுத்துக் கொள்ளலாம்.